# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 13, 2021 Weekly E-paper • March 13, 2021




## உதிக்கும் சூரியன் உதிரும் இலை!

-சுப. வீரபாண்டியன்

### ஹிட்லர்களுக்கு முடிவுரை

வழக்கறிஞர். இராம.வைரமுத்து

### கலைகிறது சீமானின் வேடம்!

தலையங்கம்

### ஏன் மலர வேண்டும் தி.மு.க ஆட்சி

இரா.விஜயலட்சுமி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 13, 2021 Weekly E-paper • March 13, 2021


# உதிக்கும் சூரியன் உதிரும் இலை!

**-சுப. வீரபாண்டியன்**

தேர்தல் நெருங்கி விட்டது. இன்னும் சில வாரங்களே உள்ளன. கூட்டணிகள் பங்கீடு முடிந்து, பெரும்பான்மையான வேட்பாளர்கள் பெயர்களும் அறிவிக்கப்பட்டு விட்டன.

யார் எந்தத் தொகுதியில் போட்டியிடுகின்றார்கள் என்பதெல்லாம் இனி நமக்குக் கேள்வியில்லை. திமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்கள் யாராக இருந்தாலும், வெற்றிக்கு உழைப்பதே நம் கடமை!

என்ன காரணம்? இது ஐந்தாண்டுக்கு ஒருமுறை வரும் வழக்கமான தேர்தல் இல்லை. திராவிட இயக்கத்தையே இம்மண்ணை விட்டு அழித்துவிட வேண்டும் என்று கருதும் தீயநெஞ்சர்கள், இரட்டை இலைக்குப் பின்னால் ஒளிந்து நின்று கொண்டு நடத்தும், போர் இது! சுருக்கமாய்ச் சொன்னால், சமூக நீதிக்கும், மனுநீதிக்கும் இடையில் நடக்கப்போகும் யுத்தம் என்றே இதனைக் கூற வேண்டும்.

ஏன் அவர்கள் பின்னால் நின்று அதிமுகவை இயக்குகின்றனர்? நேரடியாக அவர்களே களத்திற்கு வந்திருக்கலாமே என்று தோன்றும். நேராக வந்தால், அவர்கள் நம்மோடு போட்டியிட முடியாது. மீண்டும் நோட்டாவுடன்தான் போட்டியிட வேண்டியிருக்கும். எனவேதான், ராமனைப் போல் ஒளிந்து நின்று வாலியை வீழ்த்த வேண்டும் என்று கருதுகின்றனர்.

அதற்கு ஏன் அதிமுக இடம் கொடுக்கிறது? மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம் இருக்கத்தானே செய்யும்! அவர்கள் மடி முழுவதும் கனம் இருக்கிறது. அவர்களின்







மடியில் இருக்கும் கொள்ளைப் பணம் பற்றிய முழு விவரமும் பின்னால் இருப்பவர்களிடம் உள்ளது. எனவே அவர்கள் இயக்குகின்றார்கள் இவர்கள் இயங்குகிறார்கள்.

அதிமுகவையும் அழித்துவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் விருப்பம். "கழகங்கள் இல்லாத தமிழ்நாடு" என்பதுதானே அவர்கள் வைத்த மூல முழக்கம்! "இரண்டில் ஒன்றை அழி, இரண்டாம் இடத்தைப் பிடி" என்பதுதானே எப்போதும் அவர்களின் திட்டம்!

அதற்கு இந்தத் தேர்தலில் இடமில்லை என்பதால், இப்போது உள்நுழைந்து விடலாம். அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ளலாம் என்று கணக்குப் போட்டுள்ளனர். எந்தத் தேர்தலிலும், தமிழ்நாட்டில் அவர்களால் கால் பதிக்க முடியாது என்பதை, ஏப்ரல் 6 அன்று விழப்போகும் வாக்குகள் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

இரண்டே செய்திகளில் நம் கவனம் பதிய வேண்டும்! ஒன்று, வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற வேண்டும். அந்த வெற்றி மாபெரும் வெற்றியாக இருக்க வேண்டும். இன்னொன்று, பாஜக ஓர் இடத்தில் கூட வெற்றி பெற்றுவிடக் கூடாது. 20 இடங்களிலும் அவர்கள் கட்டுத்தொகை இழப்பார்கள் என்றால், அதுவே பெரியார் மண் பெறப்போகும் உண்மையான வெற்றியாக இருக்கும்!

போருக்கான சங்கொலி காதில் விழுகிறது! புறப்படட்டும் திராவிடச் சேனை!!

திக்கெட்டும் உதிக்கட்டும் சூரியன்! திசையெங்கும் உதிரட்டும் இரட்டை இலை! தனக்கொரு இடமின்றித் தானே மறையட்டும் தாமரை!!!

# "ஹிட்லர்களுக்கு முடிவுரை எழுதப் போகும் ஸ்டாலின்"

## வழக்கறிஞர் இராம. வைரமுத்து

அன்று சர்வாதிகாரி ஹிட்லருக்கு முடிவுரை எழுதினார் புரட்சியாளர் ஸ்டாலின். அதே போன்று இன்று நாட்டையே சூறையாடிக் கொண்டிருக்கும் மோடி - அமித் ஷா மற்றும் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்துத் தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்ட பழனிச்சாமி - பன்னீர்செல்வம் கூட்டத்தினருக்கு எதிர் வரும் சட்டமன்றத் தேர்தல் மூலம் முடிவுரை எழுதப் போகிறார் மு.க.ஸ்டாலின்.

பாசிச பா.ஜ.கவுடன் கரம் கோர்க்க பச்சைக் கொடி காட்டியிருந்தால் அம்மையார் ஜெயலலிதா மறைந்தபோதே மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதல்வர் ஆகியிருக்கலாம். ஆனால் அவர் கொல்லைப் புறமாக ஆட்சி அமைக்க விரும்பவில்லை என்பதோடு பா.ஜ.கவைத் துணிவோடு எதிர்த்து நின்றார்.

தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்த போது, அவரது விருப்பப்படி பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்திற்கு அருகிலேயே அவரது உடலை அடக்கம் செய்ய தி.மு.க விரும்பியது. அதற்கு அடிமை அ.தி.மு.க அரசு அனுமதி மறுத்தது. அப்போது அனுமதி பெற தங்களைத் தொடர்பு கொள்வார்கள் என பா.ஜ.க எண்ணியது. அதன் மூலம் தி.மு.கவைத் தங்கள் வலைக்குள் கொண்டு வந்துவிடத் துடித்தது. ஆயினும் மு.க.ஸ்டாலின் தி.மு.க வழக்கறிஞரணி மூலம் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். தலைவர் கலைஞரின் கடைசி ஆசையையும் நிறைவேற்றிக் காட்டினார்.

தி.மு.க தலைவராக தான் தேர்ந்தெடுக்கப் பட்ட பொதுக்குழுவில் உரையாற்றிய மு.க.ஸ்டாலின் "நாடு முழுவதும் காவி வண்ணம் அடிக்க பா.ஜ.க நினைக்கிறது. அதை ஒரு போதும் நிறைவேற்ற விட மாட்டோம்" என்று சூளுரை மேற்கொண்டார். சொன்னதைப் போலவே 2019 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க - அ.தி.மு.க கூட்டணிக்குப் படுதோல்வியைப் பரிசளித்தார். நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக தி.முகவை உயர்த்தினார்.

அவரைப் பின்பற்றி அனைத்து மாநிலங்களிலும் எதிர்க்கட்சிகள் வலுவானக் கூட்டணியை அமைத்திருந்தால் பா.ஜ.க ஆட்சியை இழந்து இருக்கும். மீண்டும் வென்ற பா.ஜ.க நாடாளுமன்றத்தில் "ஜெய் ராம்! பாரத் மாதா கீ ஜே!" என்று கொக்கரித்த போது தமிழகம் மற்றும் புதுவையில் இருந்து வென்ற நமது 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் "தமிழ் வாழ்க! தந்தை பெரியார் வாழ்க! பேரறிஞர் அண்ணா வாழ்க! தலைவர் கலைஞர் வாழ்க!" என்று முழங்கி பா.ஜ.கவிற்குப் பதிலடி கொடுத்தனர்.

இந்தியாவைக் காவிமயமாக்கத் துடிக்கும் பா.ஜ.கவின் செயல்திட்டங்களான "காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு, குடியுரிமை திருத்தச் சட்டம், மூன்று வேளான் சட்டங்கள்" போன்றவற்றை



தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் துணிவோடு எதிர்த்து நின்றார். அதனால் தான் பா.ஜ.க அல்லாத அரசு ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் அமைந்த போது தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கௌரவிக்கப்பட்டார்.

தி.மு.க தலைவராக தான் பொறுப்பேற்ற பின் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் இமாலய வெற்றி (39 / 40) பெற்றதைப் போலவே ஊரக உள்ளாட்சித் தேர்தலிலும் பெருவெற்றி (மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் - 244 & ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் - 2095) பெற்றார். ஆளும் அ.தி.மு.க 214 மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களையும், 1792 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களையும் தான் பெற்றது.

அதானிக்கு தாரை வார்க்கப்பட்ட காட்டுப்பள்ளித் துறைமுகம், ஜாதி வெறியர்களால் நடத்தப்படும் ஆணவப் படுகொலைகள், பொள்ளாச்சி பாலியல் சம்பவம், பெண் எஸ்.பிக்கு சிறப்பு டி.ஜி.பி பாலியல் தொந்தரவு, சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தந்தை - மகன் படுகொலை, தமிழக அரசுப் பணியிடங்களுக்கு வெளி மாநிலத்தவர் நியமனம், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, சேலம் எட்டு வழிச் சாலைக்கு விவசாய நிலங்கள் பறிப்பு, தலை விரித்தாடும் லஞ்ச லாவண்யம் என தமிழ்நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி உள்ளனர். செயலற்றுக் கிடந்த அ.தி.மு.க ஆட்சியைத் தனது அறிக்கைகள் மூலமும் தி.மு.க வழக்கறிஞரணி தொடர்ந்த வழக்குகள் மூலமும் செயல்பட வைத்தவர் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின். மக்களிடம் வரவேற்பைப் பெற்ற அ.தி.மு.க அரசின் ஒரு சில அறிவிப்புகளும் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினின் முந்தைய அறிக்கைகளே.

கொரோனா பெருந்தொற்று காலத்திலும் ஆளும் அரசுகள் எவ்வித உதவிகளையும் செய்யாத போது "ஒன்றிணைவோம் வா" திட்டத்தின் மூலம் மக்களின் தேவையறிந்து தக்க உதவிகளை தி.மு.கவினர் மூலம் செய்தவர் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின். "விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்" என்ற பரப்புரை மற்றும் கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு சுற்றுப்பயணம் மூலம் பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கைகளைக் கேட்டுத் தி.மு.க தேர்தல் அறிக்கை, அடுத்தப் பத்தாண்டிற்கான தொலைநோக்குத் திட்டம் போன்றவற்றைத் தயாரித்துள்ளார் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின்.

ஆகவேதான் தமிழ்நாட்டில் தற்போது "ஸ்டாலின்தான் வாராரு விடியல் தரப் போறாரு" என்ற ஒருமித்த குரல் ஓங்கி ஒலிக்கிறது. பாசிச பா.ஜ.க மற்றும் அடிமை அ.தி.மு.கவிடம் இருந்து தமிழகத்தை மீட்கும் இந்தத் தேர்தலில் பெரியாரிய மார்க்சிய அம்பேத்காரிய தோழர்கள் அனைவரும் இணைந்து தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்த வேண்டும்.

சர்வாதிகாரம் வீழட்டும் ! மக்களாட்சி மலரட்டும் !!

வாக்காளப் பெருமக்களே
வாக்களிப்போம் உதயசூரியன்

## தோழர் தண்டபாணி மறைவு



திராவிட இயக்கச் சிந்தனையாளரும், பகுத்தறிவாளரும், பெரியாரின்பால் இறுக்கமான பற்றுதல் கொண்டவருமான திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திருப்பூர் மாவட்டத் தலைவர் தோழர் சு.தண்டபாணி மறைவெய்தினார். அவருக்குப் பேரவையின் இறுதி வணக்கம்.

## இணையத்திலிருந்து......!?







தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கலைகிறது சீமானின் வேடம்!




திராவிட இயக்க முகமூடியில் வளர்ந்த சீமான் இன்று ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதைப் போல திராவிட இயக்கத்தைத் தரம்தாழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

திமுகவுக்கு ஓட்டுப் போட்டால் குஷ்டம் வரும் என்று திருவொற்றியூர் பிரச்சாரத்தின்போது அவர் பேசியிருக்கிறார். கருத்தைக் கருத்தால் மோதுவது நல்ல அரசியல்வாதிக்கு அழகு. அதை விட்டுவிட்டு இரத்தக் கண்ணீர் நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் வேடத்தில் பேசுவது நாகரீகமான செயல் அன்று.

அதானியின் துறைமுக விரிவாக்கத்தை எதிர்ப்பதற்காக திருவொற்றியூர் தொகுதியில் நிற்பதாகச் சொல்லும் அவருக்கு, அத்துறைமுக விரிவாக்கம் இருப்பது பொன்னேரியில் என்பதுகூடத் தெரியவில்லை.

பாஜகவையும், அதிமுகவையும் எதிர்ப்பதாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் சீமான் சசிகலாவையும், இந்துத்துவ சங்கிகளையும் புறக்கடை வழியாகச் சந்திக்கிறார் என்பதற்கு இணையதளத்தில் காணும் கீழ்கண்ட படமே சாட்சி.

சீமானின் வேடம் கலைகிறது.



ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# ஏன் மலர வேண்டும் தி.மு.க ஆட்சி

இரா.விஜயலட்சுமி

வரயிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும்.

ஏன்?

'நல்லாட்சி நடைபெறுவதற்கு'

என்று ஒன்றை வரியில் சொல்லி விட முடியும்.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி ' என்ற தி.மு.க வின் நிலைப்பாடு செயல்வடிவம் பெறுவதற்கு தி.மு.க ஆட்சி வேண்டும் என்று இரண்டு வரியில் சொல்லிவிட முடியும்.

சமூகநதி, பெண்களுக்கானப் பாதுகாப்பு, சாதி-மதப் பேதமற்ற சமத்துவ வாழ்க்கை முறை ஆகியன நிலைபெறுவதற்கு தி.மு.க ஆட்சி வேண்டும் என்று மூன்றே வரியில் சொல்லிவிட முடியும்.

தமிழக மக்கள் விரோதப் போக்கிற்குச் சாவு மணி அடிக்கவும் தி.மு.க ஆட்சி மலர வேண்டும்.

மேலும் தி.மு.க ஆட்சி மலர்ந்த நூறே நாட்களுக்குள் ஒவ்வொரு தொகுதியிலும் அதனதன் முக்கியப் பிரச்சனைகளுக்குச் சாத்தியப்படக் கூடிய முறையில் தீர்வு காணப்படும் என்று தி.மு.க தலைவர் தளபதி ஸ்டாலின் அளித்துள்ள பொறுப்புறுதி மெய்ப்படுவதைக் காணுகின்றப் பேறு நமக்குக் கிடைக்கிடவும் தி.மு.க ஆட்சி மலர வேண்டும். தன்மானத் தமிழர்தம் அடையாளமாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் வார்ப்பாக நம் கண் முன்னே நிமிர்ந்து நிற்கும் தளபதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்க வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்நாட்டின் மக்கள் ஒவ்வொரு






ஒட்டு மொத்தத் தமிழக மக்களுக்கும் முதலமைச்சராய் இருந்த ஜெயலலிதா சாவில் உள்ள மர்மங்களைப் பொதுவெளியில் வெட்ட வெளிச்சமாக்கி, அன்று முதல் இன்றுவரை நாடகமாடிக் கொண்டு இருக்கிற - தர்மயுத்தம் நடத்திக் கொண்டு இருக்கிற பலரை நட்டநடு வீதிக்குக் கொண்டு வரவும் திமுக ஆட்சி வேண்டும்.

தமிழ்நாட்டின் கல்வி, வேலைவாய்ப்புகள், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, காவல்துறை, வங்கி மேலாண்மை, உணவுப் பங்கீடு என்று இருக்கிற அத்தனைத் துறைகளிலும் மண்ணின் மைந்தர்களுக்கு இருக்கக் கூட்டிய உரிமைகளையும், வாய்ப்புகளையும் முற்றும் முழுதாகப் பறித்தெடுத்து வடவர்களுக்கு வாரிக் கொடுக்கின்ற மத்திய பாஜக அரசின் அடிவருடி, மெய்தடவி, செவிகடித்து, கண்சிமிட்டி, மூக்கு சொறிந்து, முதுகுவளைத்து சேவகம் செய்கின்ற எடப்பாடி பழனிச்சாமியின் தலைமையிலான அரசின், தமிழக - இரவும் மன அழுத்தங்களுக்கு ஆளாகாமல் தூங்கி, காலையில் நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் விழித்தெழ வேண்டும். குறிப்பாக மகளிர் பாதுகாப்பு உணர்வோடும், பெருமிதத்தோடும் இருக்க வேண்டும்.

நீதிமன்றத்தால் ஊழல் குற்றவாளி என்று சொல்லப்பட்டு, நான்காண்டு சிறையிலிருந்து, 10 கோடி ரூபாய் அபராதம் கொடுத்த சசிகலா, தண்டனை காலம் முடிந்து விடுதலையாகி வந்த போது பெரிய தியாகத் தலைவியாகவும், ராஜ மாதாவாகவும், அரசியல் புலியாகவும், சாதனைத் தமிழ்ச்சியாகவும் காட்சிப் படுத்தப்பட்டார்.

அதற்கு அடுத்தடுத்த நாள்களில் ஆட்சியாளர்களால் ஜெயலலிதா நினைவிடம் மூடலும், வேதா இல்லத் தடை போன்ற செயல்களும் எவ்வளவு மோசமானவை ! ஊடகங்களில் பங்கு பெற்றவர்களின் பேச்சுகள் எவ்வளவு அருவருப்பானவை !

இந்நிலையில் இப்போதைக்கு அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்த சசிகலாவின் பின்னால் பா.ஜ.க நடத்திய அரசியல் சகுனித் தனங்கள் பயங்கரமானவை.

மதச்சார்பின்மை, பெண்ணுரிமை, சமூகநீதி இவைகளைக் காலம் காலமாகக் கட்டிக்காத்தது திராவிடச் சித்தாங்களை நடைமுறைப்படுத்தியது தி.மு.கழக ஆட்சி.

பார்ப்பனர் அல்லாத மாணவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, இட ஒதுக்கீடு போன்ற உரிமைகள் அற்றுப் போய்க் கொண்டு இருக்கின்றன.

மநுஸ்மிருதி காலத்தின் குலக் கல்விக்கும், குலத்தொழிலுக்கும் மக்களை மடைமாற்றிக் கொண்டு இருக்கிறது பா.ஜ.கவின் மத்திய மோடி -அமித் ஷாவின் பாசிச ஆட்சி.

வேளாண்மையை, சேலம் இரும்புத் தொழிற்சாலையை, கனிம வளங்களை அம்பானி அதானிகளுக்குத் தாரை வார்த்துக் கொண்டு இருக்கிறது மத்திய பாஜக அரசு.

இப்படிப்பட்ட மோடி - அமித் ஷாவின் அடிமைகளாக இருக்கும் ஈ.பி.எஸ் - ஓ.பி.எஸ் இன் அ.தி.மு.க ஆட்சி ஊழல்கள் தமிழகத்தில் தலைவிரித்து ஆடுகிறது.

இப்படிப்பட்ட அரசுகளிடம் இருந்து தமிழகத்தை, தமிழ் மக்களின் உரிமைகளை மீட்கவும், தமிழ்நாடு தலைநிமிர்ந்து மாநில சுயாட்சியைப் பெறவும் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும், தளபதி ஸ்டாலின் தலைமையில் ! ●




Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,